மத்திய கலாசார நிதியத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை – 2012

நிருவாகச் சபை

2012 ஆம் ஆண்டில் மத்திய கலாசார நிதியத்தின் நிருவாகச் சபை பின்வருமாறு.

நிருவாகச் சபையின் தவிசாளர்
பிரதம அமைச்சர் மாண்புமிகு டி. எம். ஜயரத்ன

கௌரவ ரி. பி. ஏக்கநாயக்க
கலாசார, கலை அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கீதாஞ்சன குணவர்தன
பிரதி நிதியமைச்சர்

கௌரவ பெஸில் ராஜபக்ஷ
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ பந்துல குணவர்தன
கல்வி அமைச்சர்

திரு. எஸ். அமரசேகர
பிரதம அமைச்சரின் செயலாளர்

திரு. விமல் ரூபசிங்ஹ

செயலாளர்

கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு (2012 மே மாதத்திற்கு முன்னர்)

திரு. வசந்த ஏக்கநாயக்க
செயலாளர்
கலாசார, கலை அலுவல்கள் அமைச்சு (2012 மே மாதத்திற்கு பின்னர்)

கலாநிதி செனரத் திசாநாயக்க
பணிப்பாளர் நாயகம்
தொல்பொருளியல் திணைக்களம்

மாண்புமிகு பிரதம அமைச்சரால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

கலாநிதி கௌரவ ஜகத் பாலசூரிய
தேசிய மரபுரிமைகள் அமைச்சர்

திரு. டபிள்யு. ஏ. ரணவீர
செயற்பாட்டுப் பணிப்பாளர்
மத்திய கலாசார நிதியம்

அழைப்பு விடுக்கப்பட்டவர்

திருமதி என். கொடகந்த
பணிப்பாளர் நாயகம்
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

மத்திய கலாசார நிதியத்தின் பணியணி

1980ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின்படி கலாசார அலுவல்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் மத்திய கலாசார நிதியத்தின் பிரதம நிருவாக உத்தியோகத்தராக பணியாற்றுவார். நிறுவனத்தின் தலைவராக பணிப்பாளர் தலைமை அதிபதி கடமையாற்றுவதோடு மத்திய கலாசார நிதியத்தின் முழுமொத்த செயற்பொறுப்புக்களும் அபிவிருத்தி, நிருவாகம் மற்றும் நிதி போன்ற பிரதான மூன்று பிரிவுகளின் கீழ் விடயத்திற்குப் பொறுப்பான மூன்று பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இச்செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக ஆண்டினுள் கீழ்வரும் பணியணியினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

முகாமைத்துவ நிலை உத்தியோகத்தர்கள	19
கனிட்ட முகாமைத்துவ நிலை உத்தியோகத்தர்கள்	50
தொல்பொருளியல் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்	57
காப்பீட்டு உத்தியோகத்தர்கள்	52
சுவரோவிய காப்பீட்டாளர்கள்	19
எழுதுநர்கள், சாதாரண தர உத்தியோகத்தர்கள்	209
தொழிலாளர் தர உத்தியோகத்தர்கள்	1646
அமய ஊழியர்கள்	04
	2056

மதிப்பிற்குறிய T.B ஏக்கநாயக்க
கலைகலாச்சார அமைச்சர்
சலை சலாச்சார அமைச்சு

திரு.ரூபசிங்ஹ
செயலாளர்
கலை கலாச்சார அமைச்சு மற்றும் பிரதான பரிபாலன அதிகாரி
மத்திய கலாச்சார நிதியம்
(2012 மே மாதத்திற்கு முன்னர்)

திரு. வசந்த ஏக்கநாயக்க
செயலாளர்
கலை கலாச்சார அமைச்சு மற்றும் பிரதான பரிபாலன அதிகாரி
மத்திய கலாச்சார நிதியம்
(2012 மே மாதத்திற்கு பின்னர்)

சிரேஷ்ட முகாமைத்துவ குழு

சிரேஷ்ட தொல்பொருளியலாளர் பேராசிரியர் காமினி அதிகாரி
அத்தியட்சகர் ஜெனரால்
மத்திய கலாச்சார நிதியம்

திரு. டபிள்யு. ஏ. ரணவீர
செயற்பாட்டுப் பணிப்பாளர்

திரு.W.P சரத்
அத்தியட்சகர்-நிதி

திருமதி.   P.M.G மல்தெனிய
அத்தியட்சகர்-அபிவிருத்தி

தொல்பொருளியலாளர்
காமினி தொடங்வல
உதவி அத்தியட்சகர்-கட்டுப்பாடு

திருமதி.D.A.C தம்பதெனிய ஆராச்சி
உதவி அத்தியட்சகர்-வெளியீடு

கனிஷ்ட முகாமைத்தவ குழு

திரு. டயஸ் வகாச்சி
திட்ட முகாமையாளர்
பொலன்நறுவை செயற்திட்டம்

திரு H.M.M ஹேரத்
திட்ட முகாமையாளர்
கண்டி செயற்திட்டம்

திரு. R.M.A.B ரத்நாயக்க
திட்ட முகாமையாளர்
திஸ்ஸமஹாராம செயற்திட்டம்

ஆண்டின் பௌதீக முன்னேற்றம்

மத்திய கலாசார நிதியம் தாபிக்கப்படுவதற்கான ஒரு பிதான குறிக்கோளாக அமைவது இலங்கையில் உள்ள தொல்பொருள் நினைவுத் தூபிகளைப் பேணி எதிர்காலச் சந்ததியினருக்காக பாதுகாப்பதாகும். இதன்கீழ் தொடங்கப்பட்ட அபயகிரிய மற்றும் ஜேத்தவன நினைவுத் தூபிகளின் பேணலானது தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ள தேசிய ரீதியில் முக்கியத்துவமும் பெருஞ் செலவினனையும் ஏற்ற கருத்திட்டங்களாகும். மத்திய கலாசார நிதியத்தினால் தற்போது ஆரம்பித்து பேணி வரப்படுகின்ற கருத்திட்டங்களாக அமைவன,

- அபயகிரிய
- ஜேத்தவனய
- சீகிரிய
- பொலநறுவை
- கண்டி
- திஸ்ஸமஹாராமய
- காலி
- றம்பா விஹாரை
- தம்புல்ல
- வயம்ப கலாசார சதுக்க கருத்திட்டம் (யாப்பஹுவ, தம்பதெனிய, பண்டுவஸ்நுவர, குருநாகல்)
- றுஹுணு கலாசார வலயம்

2012 ஆம் ஆண்டுக்காக 82 அகழ்வு மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சிப் பணிகளும், 151 பேணல் வேலைத் தலங்களும் என்ற வகையில் 233 வேலைத்தலங்கள் முன்மொழியப்பட்டிருந்தன. இதில் 210 வேலைகளைத் தொடங்க இயலுமானதாக அமைவதோடு 42 இன் வேலைகளை நிறைவு செய்ய இயலுமாயிற்று. (11 அகழ்வுகள், 31 பேணல்கள்)

ஆண்டுக்குள் 137,478.04 அலகுகள் மேற்கொள்ளப்பட்டதோடு அதன்பௌதீக முன்னேற்றம் 71.2% ஆகும். இப்பணிகளை ஈடேற்றுவதக்கான நேரடிச் செலவினமாக 317.13 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதோடு, நேரடிச் செலவு முன்னேற்றம் 57.7% ஆகும். ஆண்டுபூராவிலும் இப்பணிகளை ஈடேற்றுவதற்காக 250,538 மனித நாட்கள் செலவிடப்பட்டன.

அந்தந்த கருத்திட்டங்களின் சுருக்கமான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

அபயகிரிய கருத்திட்டம்

அகழ்வுப்பிரிவு

இதன்கீழ் குட்டம்பொக்குண பொய்கையைச் சார்ந்த கட்டடம் தாதுகோபுரத்தின் மேற்கு வாயில், தூபாராம பழைய வைத்தியசாலைத் தொகுதி, தூபராமவின் நிலக்காட்சிக்கான அகழ்வுகள், றுவன்வெலி தொகுதியின் பழைய வைத்தியசாலை ஆகிய இடங்களில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அகழ்வுப் பிரிவின் கீழ் அரும்பொருட் காட்சியகத்தின் நாளாந்தப் பராமரிப்பு மற்றும் பார்வையாளர்களுக்கு விழிப்பூட்டுதல், நூலகமும் பதிவேட்டகமும், இரசாயன ஆய்வுகூடமும் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் ஆகிய பணிகளும் ஆண்டு முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டன.

தூபாராம பூகோளஅமைப்பு தொடர்பான ஆராய்வு

<u>பேணல் பிரிவு</u>

தாதுகோபுர வளவில் பேணல் பணிகளுக்காக தொடர்ந்தும் முன்னுரிமை வழங்கப்பட்டது. தாதுகோபுர மண்டபத்தில் செங்கல் வேலைகளும் செங்கல் இடைவெளிகளை நிரப்புதலும் நிறைவு செய்யப்பட்டதோடு, மண்டபத்தின் மேற்பகுதிகளில் எதிர்பாராத வண்ணம் பழைய செங்கற்களை முழுமையாகவே அகற்றி புதிதாக செங்கல் பதிக்க ஏற்பட்டதாலேயே இப்பணிக்காக எதிர்பார்த்திராத வகையில் நீண்டகாலம் கழிந்தது. மண்டபத்தின் வேலைக்காக சிரமதானம் மூலமாகவும் பாரிய பக்கபலம் கிடைத்தது.

மண்டப பேணலை நிறைவு செய்த பின்னர் உட்பெருஞ் சுவரினதும், சலபதலகூடம், பேசாப மற்றும் தூபியின் வெளிப்பெருஞ் சுவரினதும் வேலைகள் தொடங்கப்பட்டன. உட்பெருஞ்சுவரில் எதிர்பாராத வகையில் பெருந்தொகையான கருங்கற்களை கழற்றி எடுத்து மீண்டும் கட்டவேண்டிய நிலையேற்பட்டது. கடந்த சில வருடங்களாக பேசாவவின் பாதுகாப்புக்காக மண்ணால் மூடப்பட்டிருந்தது. மண்டப வேலைகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் அந்த மன்னை அகற்றி பேசாவ வெளிக்கொணரப் பட்டதோடு பேணப்படவேண்டிய பகுதிகளின் வேலைகள் தொடங்கப்பட்டன.

சலபதல கூடத்தின் பேணல் பணிகள் ஆண்டின் இறுதிக்காலாண்டில் மிக வேகமாக மேற்கொள்ளப்பட்டன. இதற்காகவும் சிரமதானம் மூலமாக பாரியளவிலான பணிகள் ஈடேறப்பட்டதோடு மணல்கூடம் மற்றும் வெளிப்பெருஞ் சுவரினதும் எஞ்சிய பேணல் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. தாதுகோபுர வளவுக்கு மேலதிகமாக லங்காராம கட்டட இலக்கம் 16, தாதுகோபுர வளவில் எஞ்சிய வேலைகள் (சுற்றுவேலி மற்றும் வெளிப்பெருஞ் சுவர்), இலக்கம் 30 E கட்டடம், வேலைத்தலம் 08 இன் சங்கமனசரய ஆகிய பேணல் பணிகள் மேற்கொள்ளப்பட்டதோடு லங்காராம சிலைக்கூடத்தின் (இலக்கம் 16) 30E கட்டடத்தினதும் சங்கமனசரயவினதும் பேணல் நிறைவு செய்யப்பட்டது. தூபாராம போதியினதும் முதற்கட்ட பேணல் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

தொல்பொருளியல் நிலப்பகுதியின் உல்லாசப் பயணிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்காகவும் ஒருசில நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப் பட்டன. சந்திரவட்டக்கல்லுக்கு அருகில் உள்ள நடைபாதையை மீளமைத்தல், பிரதான இரசாயண ஆய்வுகூடத்தின் கட்டடத் திருத்த வேலைகள், அரும்பொருட் காட்சியக மலசலக்கூட திருத்தவேலைகள், வாகன சேவை நிலையங்களை தயாரித்தல் என்பன இதன்கீழ் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு மேலதிகமாக ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள், விஞ்ஞான ரீதியான பராமரிப்பு மற்றும் அபயகிரி மகாவிஹாரையினதும் தாதுகோபுர வளவின் நாளாந்தப் பராமரிப்பும் தொடர்ச்சியாக அமுலாக்கப்பட்டது.

<u>ஜேத்தவன கருத்திட்டம்</u>

<u>அகழ்வுப் பிரிவு</u>

கடந்த ஒரு சில வருடங்களைப் போன்றே 2012 ஆம் ஆண்டிலும் கருத்திட்டத்தின் அகழ்வுப்பணிகள் தாழ்ந்த மட்டத்திலேயே பேணப்பட்டு வந்தன. பெருந்தொகை யான தொழிலாளர்கள் அபயகிரி தாதுகோபுர வளவில் பேணல் பணிகளைத் துரிதமாக்க ஈடுபடுத்தப்பட்டமையே இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது.

மஹிந்த பிரிவேனாவுக்கு அருகில் ஆராய்ச்சி அகழ்வுகள் தொடங்கப்பட்ட போதிலும் மிகையான மழை காரணமாக அகழ்வு நிலப்பரப்பு நீரில் மூழ்கியதால், இடைநிறுத்தவேண்டிய நிலையேற்பட்டது. மொணற மாளிகையின் அகழ்வுப் பணிகளும் ஆண்டிறுதியில் தொடங்கப்பட்டன.

அகழ்வுப் பிரிவின்கீழ் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு (தொல்பொருள்கள் - எலும்பு, முத்துக்கள், கற்கள், உலோகங்கள், செம்பு போன்றவை) தொல்பொருளியல் வருடாந்த அறிக்கையைத் தயாரித்தல், அரும்பொருட் காட்சியகம், கற்சாசன ஆராய்ச்சி அறிக்கைகள், உப இரசாயண ஆய்வுகூடங்கள் ஆகிய பணிகளும் தொடர்ச்சியாக அமுலாக்கப்பட்டன.

அநுராதபுரம், பொலநறுவை மற்றும் சீகிரியா உலக மரபுரிமை தொடர்பாக உருவாக்கப்பட்ட விவரணத் திரைப்படத்திற்காகவும் 5.94 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

மொரன மாளிகையில் மேற்கொண்ட ஆராய்வு

<u>பேணல் பிரிவு</u>

போதிமரத்தின் சுற்றுப்புற வேலியின் பேணல் பணிகள் தொடங்கப்பட்டபோதிலும் ஒரு தொழில்நுட்பச் சிக்கல் தொடர்பாக ஆலோசனைக்குழுவின் தீர்மானம் கிடைக்கும் வரை இடைநிறுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக தொடங்கப்பட்ட மற்றைய பிரதான பணியான ஸ்ரீ மகாபோதி வளவின் எல்லைப்புற மதிலையும் அதனைச் சார்ந்த தூபிகளையும் பேணும் நடவடிக்கைகள் அதற்கான நிதியேற்பாடுகள் வழங்கப்பட்ட தங்கவேலி நிதியத்திற்காக புதிய நிர்வாகச் சபையொன்று நியமிக்கப்பட வேண்டிய இருந்தமையால் இடைநிறுத்தப்பட வேண்டிய நிலையேற்பட்டது. தூபியின் பேசாவ மற்றும் யானைமுக வடிவ மதிலின் பண்டைய சாந்தின் ஒழுங்குறுத்தல் மற்றும் நிலையங்களைப் பேணும் நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டன.

கருத்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றகரமாக்கும் நோக்கத்துடன் அரும்பொருட்காட்சியாக கட்டடத்திற்கு வர்ணம் பூசப்பட்டதோடு கட்டடத்தைச் சுற்றி கம்பி வேலியும் புதிய புகுமுக வாயிலும் அமைக்கப்பட்டது.

பேணல் பிரிவின் கீழ் தொல்பொருளியல் நிலப்பிரதேசத்திலும் பேணிப் பாதுகாக்கப்பட்ட நினைவுத்தூபிகளிலும் விஞ்ஞான ரீதியான பராமரிப்பு மற்றும் சாதாரண பராமரிப்புப் பணிகள் தொடர்ச்சியாக அமுலாக்கப்பட்டன.

பொலநறுவை கருத்திட்டம்

அகழ்வுப் பிரிவு

வெளிப்புறநகர் ஆய்வுப் பணிகளும் அகழ்வுப் பணிகளும் ஆண்டு பூராவிலும் மேற்கொள்ளப்பட்டன. திம்புலாகல சுற்றுப்புற ஆய்வுப் பணிகளும் அமுலாக்கப் பட்டதோடு மழைக் காலங்களில் இடைநிறுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

அகழ்வுப் பிரிவில் கீழ் மாதாந்த விரிவுரைகள், கருத்தரங்குகளும் மற்றும் செயலமர்வுகளும், அதனைச் சார்ந்த சஞ்சிகையும், நூலகம், இரசாயண ஆய்வுகூடம் மற்றும் அரும்பொருட்காட்சியகத்தின் அன்றாடப் பராமரிப்பு, பார்வை யாளர்களுக்கு விழிப்பூட்டுதலும் அமுலாக்கப்பட்டது.

அநுராதபுரம், பொலநறுவை மற்றும் சீகிரியா உலக மரபுரிமை நகரம் தொடர்பாக திரு. சுதத் ரோஹணவின் இயக்கத்தில் விவரணத் திரைப்படமொன்று தயாரிக்கப் பட்டது. இதற்காக 5.94 மில்லியன் ரூபா செலவாகியது.



கிழக்கு விஹாரையின் ஆராய்வு

<u>பேணல் பிரிவு</u>

இதன்கீழ் உட்புறநகர் கிழக்குப் பெருஞ்சுவர் மற்றும் வடக்குத் தலைவாசல், விஜயபாகு மாளிகை, இலக்கம் 02 சிவன் கோவிலுக்கு அருகில் பண்டைய செங்கல் மதில் மற்றும் கிரிவெஹெர நீள்சதுர திட்டு என்பவற்றின் எஞ்சிய பேணல் வேலைகள் அமுலாக்கப்பட்டன. கிரிவெஹெர வெண்சுண்ணாம்பு பூசுதல் நிறைவு செய்த பின்னர் நீள்சதுர திட்டுப் பேணல் பணிகளும் தொடங்கப்பட்டன

கல்விஹாரையின் தாழ்வாரத்திற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் இரண்டாந்தடவையாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு 7.8 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு, இது தொடர்பான இறுதி தீர்மானம் கேள்விப்பத்திர சபையின் மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது.

கருத்திட்டத்தின் வீதிதொகுதி அடிக்கடி திருத்தப்பட வேண்டுமென்பதால் மேதகு சனாதிபதியவர்களின் விதப்புரையின் பேரில் கொங்கிறீட் கற்கள் இடப்பட்டு செப்பனிடல் ஆரம்பிக்கப்பட்டதோடு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பிற ஒப்பந்தக் கம்பெனி மூலமாக ஒரு கிலோ மீற்றர் வீதம் கற்கள் இடப்பட்டு செப்பனிடப்பட்டது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூலமாக இதன்பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப மதிப்பீடு 58 மில்லியன் ரூபாவாக அமைந்ததுடன் இது மீளத்திருத்தி அமைக்கப்பட்டது.

ஆதித்ய வதிவிடவிடுதி நவீனமயமாக்கப்பட்டு சுற்றுலா பங்களாவாக பாவிக்கப்படல் தொடங்கப்பட்டது. கல்விஹாரை அருகில் விற்பனைக் கூடங்களை அமைத்தல் நிறைவு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக கல்விஹாரைக்கு அருகில் வாகனத் தரிப்பிடம் அமைத்தலும் தொடங்கப்பட்டதோடு, மண்பரப்பப்பட்டு மட்டமாக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. பேணல் பிரிவின் கீழ் அறிக்கைகளைத் தயாரித்தல், விஞ்ஞானரீதியான பராமரிப்பு மற்றும் தொல்பொருளில் நிலப்பகுதியின் சாதாரண பராமரிப்பு என்பவை இடையறாமல் அமுலாக்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டில் பொலநறுவை கருத்திட்டம் மூலமாக சுற்றுலாத்துறை உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்காக மேற்படி நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்பட்டதோடு இதன் பொருட்டு 12.91 மில்லியன் ரூபா அதாவது பேணல் பிரிவின் மொத்தச் செலவில் 43% செலவிடப்பட்டது.

கிரிவேஹெரையில் நெட்டாங்கு பாதுகாப்பு நடவடிக்கையை
மேற்கொள்வதற்கு முன்

கிரிவேஹெரையில் நெட்டாங்கு பாதுகாப்பு நடவடிக்கையை
மேற்கொண்டதன் பின்

சீகிரியா கருத்திட்டம்

உட்புற நீர்க் கால்வாயின் வடக்குப்பகுதி அகழ்வுகளைத் தொடங்குவதற்காக ஆய்வு மற்றும் நிலஅளவைப் பணிகள் ஆண்டில் முதல் காலாண்டில் மேற்கொள்ளப்பட்டன. வடக்குத் தலைவாசல் வளவின் ஆராய்ச்சிக்கான அகழ்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு மேலதிகமாக ஆய்வு மற்றும் அகழ்வு அறிக்கைகளை அச்சிடுவதற்காகத் தயாரித்தல், தொல்பொருள் பகுப்பாய்வு மற்றும் தரவுக் களஞ்சியம், தொல்பொருட் களைப் பேணுதல், மட்பாத்திரப் பகுப்பாய்வு ஆகிய பணிகளும் தொடர்ச்சியாக இயங்கி வந்தன.

அரும்பொருட் காட்சியகத்தின் விசேட கண்காட்சிகள், பதிவேட்டறை, கூடங்கள் மற்றும் தொல்பொருளியல் தரவுகளின் ஒழுங்குறுத்தல் மற்றும் அன்றாடப் பராமரிப்பும் மேற்கொள்ளப்பட்டன.

எதுள்தியாகலையில் ஆராய்வு மேற்கொள்வதற்கு முன் ஆராய்வு மற்றும் அளவீடு நடவடிக்கையை மேற்கொள்ளல்

பேணல் பிரிவு

கல்லின் உச்சியில் பண்டைய செங்கல் மதில், சிங்கபாத கூடம் மற்றும் அதன் மேற்கு - கிழக்கு சரிவுகளின் பேணல் பணிகள் தொடங்கப்பட்ட போதிலும் அப்பணிகள் ஆண்டின் ஆரம்ப மாதங்கள் சிலவற்றுக்கு கட்டுப்பட்டதாக அமைந்தன.

கல்லின் உச்சிவரை பேணல் பொருட்களை எடுத்துச் செல்லலானது மிகவும் கடினமாக அமையக்காரணம் பார்வையாளர்களுக்கு தடையேற்படாத வகையில் இப்பணிகளைப் புரியவேண்டி ஏற்பட்டது. பொருட்களின் போக்குவரத்துக்காக பொருத்தப்பட்ட கருவியும் கோளாறுகள் நிறைந்ததாக அமைந்தமையால் உழைப் பாளிகளை ஈடுபடுத்தி இப்பணிகளை ஈடேற்ற வேண்டிய நிலையேற்பட்டது. எனவே தொடர்ச்சியான பேணல் பொருட்களை கல்லின் உச்சிக்கு கொண்டு செல்லும் வரை இப்பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

சிங்கபாதத்தினதும் சரிவுகளினதும் பேணலுக்கு மழை காரணமாக தடைகள் ஏற்பட்டன. மிகையான மழை மற்றும் காற்று பல மாதங்களாக நிலவியதுடன் அக்காலப்பகுதியில் இப்பணிகளை நிறைநிறுத்த வேண்டி நேரிட்டது.

நீர்ப்பூங்காவின் வடக்குப் பகுதியினதும் கற்பூங்காவினதும் விஞ்ஞான ரீதியான பராமரிப்புப் பணிகளுக்கும் உள்ளக வீதிப் பராமரிப்பு பணிகளுக்கும் மழையினால் தடைகள் தோன்றின.

அரும்பொருட் காட்சியத்தின் மாற்றுவழியைத் தயாரித்தல் மற்றும் மொறகஹமுல விற்பளைக்கூடப் பராமரிப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. பழைய அலுவலகக் கட்டடம் விடுதியொன்றாக விருத்தி செய்யப்படும் பணிகளும் அமுலாக்கப்பட்டன.

<u>தம்புல்ல சுவரோவியங்களைப் பேணுதல்</u>

இதன்கீழ் எவரியபத்தஹ ஏஹமகாவிஹாரையினமதும் மானிங்கமுவ ரஜமகாவிஹாரை யினதும் சுவரோவியங்களின் பேணல் பணிகள் நிறைவு செய்யப்பட்டன

தம்புல்ல உயன்வத்த விஹாரை தர்மசாலையின் கூரைப் புனரமைப்பு மற்றும் அரும்பொருட் காட்சியக பாதுகாப்பு வேலியையும் படலையையும் அமைத்தல் நிறைவு செய்யப்பட்டது.

இதற்கு மேலதிகமாக உயன்வத்த பன்சல மற்றும் அரும்பொருட்காட்சியத்திற்கு இடையில் தாங்கு மதில் அமைக்கும் பணிகள் ஆண்டின் இறுதிக் காலாண்டில் தொடக்கப்பட்டன.

சுவரோவிய அரும்பொருட் காட்சியகத்தினையும் சுற்றுப்புற நிலப்பகுதியையும் சுத்தம் செய்து பராமரித்தலும் தொடர்ச்சியாக அமுலாக்கப்பட்டது. அரும்பொருட் காட்சியக சுவருக்கு வர்ணம் பூசுதலும் தொடங்கப்பட்டது.

மானின்கமுவ ரஜமஹாவிஹாரையின் ஓவியங்கள் பாதுகாப்பு நடவடிக்கையின் முடிவின் போது

கண்டிக் கருத்திட்டம்

அகழ்வுப் பிரிவு

வேகிரிய, விஹாரை வளவினைச் சார்ந்த ஆய்வுப் பணிகள் அமுலாக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக அகழ்வு மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளைத் தயாரித்தல், தொல்பொருள்களின் பகுப்பாய்வு மற்றும் சர்வதேச தகவல் நிலையத்தில் பார்வையாளர்களுக்கான விரிவுரைகள், வீடியோ காட்சிகள் மற்றும் பாடசாலை களுக்கான நடமாடும் கண்காட்சிப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன.

வேகிரிய பிரதேச ஆராய்வு நடவடிக்கை

பேணல் பிரிவு

புளுகஹதென்ன, கன்தேபிட்ட மற்றும் அத்தரகம ரஜமகாவிஹாரைகளின் பேணல் பணிகள் அமுலாக்கப்பட்டன. இதில் அத்தரகம பேணல் பணி நிறைவு செய்யப்பட்டது.

முலாதேனி (விதானையார்) மாளிகையின் விருத்திப் பணிகள் ஒப்பந்தப்பாதையினால் மேற்கொள்ளப்பட்டது. நாத தேவாலயத்தின் சங்காவாசாவின் கூரையும் ராம விஹாரை ஆசிரமத்தின் பேணல் பணிகளும் இறுதிக் காலாண்டில் தொடங்கப் பட்டன.

2012 ஆம் ஆண்டில் அஸ்கிரிய தொகுதியில் 06 ஆசிரமங்களின் (தொரதெணிய) யட்டவத்த, கொட்டகதெனிய, வெல்லவ, லேனவ மற்றும் யட்டவர) கூரைகளைப் பேணும் பணிகளுக்கு முந்துரிமை அளிக்கப்பட்டது. அதிமேதகு சனாதிபதியவர்களின் விதப்பரையின் பேரில் மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்ட இப்பணிக்காக 13.5 மில்லியன் ரூபா செலவாகியது. கூரையை பேணும் பணிகளும் நிறைவு செய்யப்பட்டன. எனினும் அக்கட்டடங்களில் சிதைவடைத்த சாந்துப் பகுதிகளை நிரப்பி வர்ணம் பூசப்படவும் வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டமையால் அப்பணிகளையும் தொடங்கவேண்டி நேரிட்டது.

இதற்கு மேலதிகமாக மல்வத்த தொகுதியின் தும்பன இஹல பன்சல தாங்குமதில் நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்டதோடு மிகையான மழைவீழ்ச்சி காரணமாக இடைநிறுத்தப்பட்டது. செல்லாவலீ மற்றும் மக்குலேதென்ன பௌத்த ஆலயங்களின் நிலக் காட்சிப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
அஸ்கிரிய கூரை பேணல் பணிகள் ஆகஸ்ற் மாதத்தில் நிறைவடைந்த வேளையில் மெணிக்ஹின்ன ரஜ மகாவிஹாரையின் பேணல் பணிகளுக்கு முந்துரிமை வழங்கப்பட்டது.

சுவரோவியம் பேணல் பணிகளின் கீழ் அத்தரகம, நாவான, கந்தேபிட்ட (இரண்டாம் கட்டம்) மற்றும் உடுதும்புற தேவகிரி புராண விகாரையின் பேணல் பணிகள் அமுலாக்கப்பட்டன. கருத்திட்டத்தின் வசதிகளை விருத்தி செய்தலின் கீழ் சர்வதேச தகவல் நிலையம், தாம்புகல அலுவலக கட்டடத்தின் முன்னேற்றகரமாக்கல் மற்றும் உள்ளக அலங்கரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேவேளையில் கருத்திட்ட அலுவலக வளவு, மெதவாசல மற்றும் சர்வதேச தகவல் நிலைய சுற்றுப்புறத்தை சுத்தம் செய்தல் மற்றும் உலக மரபுரிமைக் கூறின் பணிகள் தொடர்ச்சியாக இடம் பெற்றன.

கலாசார அமைச்சரின் விதப்புரையின் பேரின் தம்பான வேடர் தலைவர் திசாஹாமியின் கல்லறையை ஒழுங்காக அமைத்தலும் அதன் சுற்றுப்புற நிலக்காட்சிப் பணிகளும் விசேடமானவையாக அமைந்தன. இதில் பங்கேற்ற அனைவரினதும் ஆர்வம் காரணமாகவேல இப்பணியையும் வெற்றிகரமாக நிறைவு செய்ய இயலுமாயிற்று.

அத்தரகம ரஜமஹாவிஹாரையின் பாதுகாப்பிற்கு முன்

அத்தரகம ரஜமஹாவிஹாரையின் பாதுகாப்பிற்கு பின்

றம்பா விஹாரை கருத்திட்டம்

அகழ்வுப் பிரிவு

இதன்கீழ் தொடக்கப்பட்ட 17/1 ஆம் ஆசிரம அகழ்வு மற்றும் ரிதியகம ஆய்வுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. 10/1 ஆம் ஆசிரம அகழ்வும் தொடக்கப்பட்டபோதிலும் நடைமுறை ஏதுக்கள் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக 21 ஆம் ஆசிரமத் தொகுதியின் நிலக்காட்சிக்காக வெளியாக்குதல், மட்பாண்டங்கள் மற்றும் தனித்துவமான தொல்தொருள் பகுப்பாய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

பேணல் பிரிவு

இதன்கீழ் 21 ஆம் ஆசிரமத் தொகுதியின் மதில்களினதும் அதனைச் சார்ந்த கட்டுமாணங்களினதும் பேணல் பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

கருத்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்காக இல 01 விடுதிக்கான புதிய பகுதியினைச் சேர்த்தல், இல. 02 விடுதியின் செப்பனிடல் பணிகள், புதிய காவற்கூடத்தை அமைத்தல் மற்றும் புதிய மலசலகூடத் தொகுதியை அமைத்தல் மேற்கொள்ளப்பட்டதோடு இப்பணிகள் நிறைவு செய்யப்பட்டன. றம்பா விஹாரை யின் சங்காவாச கட்டுமாணப் பணிகளும் ஒப்பந்தத் திட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்டன.

விஞ்ஞானரீதியான பராமரித்தலின் கீழ் பாதுகாப்கப்பட்ட நினைவுத்தூபிகளின் அத்தியாசியமாக ஈடேற்றப்படவேண்டிய பணிகள் சில மேற்கொள்ளப்பட்டதுடன் எதிர்பார்த்த பணிகள் நிறைவுசெய்யப்பட்டன.

நினைவுத்தூபிகள் மற்றும் கருத்திட்ட நிலப்பரப்பின் அன்றாடப் பராமரிப்பு, இரசாயன ஆய்வுகூடம் மற்றும் புராதன சாந்துப் பேணல் மற்றும் ஒழுங்குறுத்தல் என்பவை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

திஸ்ஸமஹாராம கருத்திட்டம்

அகழ்வுப்பிரிவு

அக்குருகொட தொல்பொருள் ஆய்வு அகழ்வானது வருடம் பூராவிலும் அமுலாக்கப்பட்டது. றுஹுணு பல்கலைக்கழகப் பட்டதாரிகள் இதற்காக நேரடிப் பங்களிப்பினை வழங்குவதோடு அனைத்து அகழ்வுப் பணிகளும் அவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றது. பிரதேசத்தில் உள்ள நிகழ்கால மானிடச் செயற் பாடுகள் ஆகக்குறைந்த அளவில் இடம்பெற்றுள்ள இடமாக இந்த அகழ்வுப் பிரதேசம் இனங்காணப்பட்டுள்ளதோடு, பலநூற்றாண்டுகளாக மானிடக் குடியிருப்புகள் இருந்தமைக்கான சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் புவிமேற்பரப்பில் இருந்து 6 மீற்றர் மட்டம் வரையான அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்றளவில் கறுப்பு மற்றும் சிவப்பு சட்டித்துண்டுகள், மட்பாண்டங்கள், முத்துக்கள், எலும்புகள் மற்றும் ஆபரணத் துண்டுகள் பல கிடைத்துள்ளன.

இதற்கு மேலதிகமாக விசேட தொல்பொருள் கூறு, இரசாயண ஆய்வுகூடம் (கதிர்காம அரும்பொருட் காட்சியகம் மற்றும் கருத்திட்டம்) அரும்பொருட் காட்சியகப் பராமரிப்பு மற்றும் பிரச்சாரப் பணிகளும் தொடர்ச்சியாக அமுலாக்கப் பட்டன.

அகுரேகொட ஆராய்வு இடம்பெறும் போது

<u>பேணல் பிரிவு</u>

சந்தகிரிய தாதுகோபுர வனவின் பேணல் பணிகள் ஆண்டு பூராவிலும் அமுலாக்கப் பட்டன. இதன்கீழ் தாதுகோபுர மண்டபத்தின் செங்கல் இடைவெளி மற்றும் எஞ்சிய செங்கற்களைப் பேணல், மேல் மாடத்தின் கற்பரவல், பெருஞ்சுவர் மதில், நிலக்காட்சி மற்றும் வாகனத் தரிப்பிடத்தை அமைத்தல், போதி சுற்று வேலியினதும் கீழ் மாடத்தினதும் கிழக்குப்பகுதியினதும் தாங்குமதில் பேணல் ஆகிய பணிகள் ஈடேற்றப்பட்டன. இடைக்கிடையே தொல்பொருளியல் ஆலோசனை பேரவையினதும் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டு இப்பணி ஈடேற்றப்பட்டதோடு மொத்தப்பணியில் ஏறக்குறைய 90% ஐ நிறைவுசெய்ய இயலுமாயிற்று.

தனித்துவமான சில பணிகள் பேணல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. தெபரவெவ பஸ்சிமாராம தாதுகோபுரத்தின் சாந்து பேணல் மற்றும் சுண்ணாம்புப் பூச்சு அத்துடன் திஸ்ஸ தாதுகோபுர மண்டபத்தின் மேற்படியில் தோன்றியுள்ள நுண்ணிய வெடிப்புகளின் பேணலுக்காக சாரங்களை எடுத்தலும் இதில் அடங்கும்.

இதற்கு மேலதிகமாக, கதிர்காம சுற்றுலா விடுதிப் பராமரிப்பு, கருத்திட்ட வளவின் பராமரிப்பு மற்றும் பேணல் அறிக்கைகளைத் தயாரித்தலும் அமுலாக்கப்பட்டது.

சந்தகிரிய ஸ்துாபியின் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் போது

காலி கோட்டைக் கருத்திட்டம்

அகழ்வுப் பிரிவு

கடல் தொல்பொருளியல் கூறு ஆண்டுபூராவிலும் அமுலாக்கப்பட்டதோடு, இதன் மூலமாக இலங்கையின் கிழக்கு, வடக்கு மற்றும் வடமேல் கரையோரம் சார்ந்த வகையில் மூழ்கியுள்ள கப்பல்கள் பற்றிய ஒருசில ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப் பட்டன. அதேவேளையில் தற்போது ஆய்வுசெய்து அறிக்கையிடப்பட்டுள்ள காலி துறைமுகம் சார்ந்த கடல்தொல்பொருளியல் வேலைத்தலங்களில் நிலையப் பேணல் பணிகளும் ஒழுங்குறுத்தலும் மேற்கொள்ளப்பட்டன.

மூழ்கிய கப்பல் தொடர்பான ஆராய்வின் போது

கடல் தொல்பொருளியல் இரசாயன ஆய்வுகூடத்தின் தொல்பொருள்களை அறிக்கை யிடலும் பேணல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டதோடு உப்புவெளி பிரதேச ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட பீங்கான் களிமண்ணால் தயாரிக்கப்பட்ட சிறப்பான தொல்பொருள்கள் காணப்பட்டன.

சமுத்திர தொல்லியல் இரசாயன ஆய்வுக்கூடத்தில் தொல்பொருள் பாதுகாப்பு இடம்பெரும் வேளை

இதற்கு மேலதிகமாக கடல்தொள்பொருள் அரும்பொருட் காட்சியகத்தைப் பார்வை யிடுவோருக்கான விரிவுரைகள், செயலமர்வுகள், கண்காட்சிகள் மற்றும் விழிப் பூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டன. காலி கோட்டைக்குள் ஒல்லாந்த களஞ்சியக் கட்டடத் தொகுதியினதும் அதனைச் சார்ந்த நிலப்பகுதியின் பராமரிப்புப் பணிகளும் அமுலாக்கப்பட்டன.

<u>பேணல் பிரிவு</u>

கருமுணி வளவ்வ மற்றும் அதனைத் சார்ந்த அன்றாடப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மிகவும் இடிபாடைந்த நிலையில் உள்ள பிரித்தானிய கட்டடக்கலை நுணுக்கங்களுக்கிணங்க கட்டியெழுப்பப்பட்ட இந்த பெறுமதிமிக்க கட்டடத்தை வெகுவிரைவில் பேண வேண்டியுள்ள போதிலும் 2012 ஆம் ஆண்டிலும் அதற்கான வேலைத்திட்டத்தை தயாரித்துக்கொள்ள இயலாமல் போயிற்று.

இந்த வளவில் பாதுகாப்பு வேலி மற்றும் படலையை நிர்மாணித்தல் இடைக்கிடையே சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டதோடு தேவையான தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்ள இயலாமல் போனமை சிக்கலாக அமைந்தது.

<u>வயம்ப கலாசார சதுக்கம்</u>

<u>யாப்பஹுவ வேலைத்தளம்</u>

<u>அகழ்வுப் பிரிவு</u>

04 ஆம் இலக்க குகையின் ஆராய்ச்சி அகழ்வு, வெளியேறும் நீர்அகழி, நாகொல்ல, ரஜமகா விஹாரையின் பட்டானகர தொகுதி பங்களா பற்றிய ஆராய்ச்சி அகழ்வு, ஹாத்திகமுவ குருகொட விஹாரை, பங்களாபிட்டிய தடாகம் மற்றும் அம்பன் பொதல குருகொட விஹாரை ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மிகையான மழை காரணமாக வெளியேறும் நீர் அகழி மற்றும் பங்களாபிட்டிய ஆராய்ச்சி அகழ்வுகளை வருட இறுதிக்காலாண்டில் நிறுத்த வேண்டிய நிலையேற்பட்டது.

நாகொல்ல ரஜமஹாவிஹாரையின் ஆராய்வின் போது

<u>பேணல் பிரிவு</u>

பங்களாபிட்டிய தாதுகோபுரம் பேணுதலும், அதற்குச் சமாந்தரமாக அதன் உட்புற மாடம் பற்றிய வெளிப்பெருஞ்சுவர் புனரமைக்கப்பட்டது. தலதா மாடம் மற்றும் கல் உச்சிக்கு இடையில் பழைய கல்படிக்கட்டு பேணலும் அதேவேளையில் இதன் இரண்டாவது கட்டடத்திற்கு அவசியமான பொருட்களை போக்குவரத்துச் செய்தலும் மேற்கொள்ளப்பட்டது.

தலதா மலுவை மற்றும் பாறையின் மேல் அமைந்துள்ள படிகற்களையும்பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும் போது

கய்காவல ரஜமகா விஹாரையின் பெருஞ்சுவர் மதில், யாப்பஹுவை ரஜமஹா விஹாரையின் மணிக்கோபுரம் ஆகிய பணிகளும் ஈடேற்றப்பட்டதோடு கய்காவல பெருஞ்சுவர் நிறைவு செய்யப்பட்டது.

வெளிநீர் அகழி மற்றும் கல்உச்சி வரையான படிக்கட்டு வரிசையின் இரண்டாம் கட்டத்தையும் நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்க இயலுமாயிற்று.

சுவரோவியங்கள் பேணலின் கீழ் நாகொல்ல ரஜமகா விஹாரையிலும் கடவல கெதர ரஜமகா விஹாரையினதும் பேணல் நிறைவு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக பலல்ல ரஜமகா விஹாரையின் பேணல் பணிகள் ஆண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டன.

கருத்திட்ட அலுவலகக் கட்டடத்தை முன்னேற்றகரமாக்குதலும் களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துதலும் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கருத்திட்ட நிலப்பரப்பின் பராமரிப்புப் பணிகளும் ஆண்டு பூராவிலும் மேற்கொள்ளப் பட்டன.

தம்பதெனிய வேலைத்தலம்

அகழ்வுப் பிரிவு

தம்பதெனிய மாளிகாகல் ஆய்வு, விஜேசுந்தரராராமய வெளிச்சுவர் மற்றும் அந்த வளவின் அறிக்கையிடல், நாரம்மல ரஜமகாவிஹாரை மற்றும் கல்தெனிய ரஜமஹா விஹாரையின் ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டன. விஜேசுந்தரரராராம தெற்கு மதிலின் ஆராய்ச்சி அகழ்வு ஆண்டின் மூன்றாவது காலாண்டில் தொடக்கப்பட்டது.

பேணல் பிரிவு

விஜேசுந்தராராம விஹாரையின் பெருஞ்சுவர் மதிலின் வடக்குப்பகுதி, களுந்தேவ ரஜமகா விஹாரை மற்றும் நாரம்வல ரஜமகா விஹாரையின் புகுமுக வாயிலை முன்னேற்றகரமாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு மேலதிகமாக விஜேசுந்தராராம விஹாரையின் ஒய்வு மண்டபக் கட்டடத்தின் முதலாம் மாடியின் நிர்மாணிப்புகளும் அமுலாக்கப்பட்டது.

சுவரோவியங்கள் பேணலின் கீழ் ருக்மலே கிரிகுஹாராமய மற்றும் சிறிகல ரஜமஹாவிஹாரையின் பேணல் பணிகள் நிறைவு செய்யப்பட்டதுடன் நாரம்மல ரஜமகா விஹாரையின் பேணல் பணிகள் நிறைவடைந்து வந்து கொண்டிருந்தன. போபிட்டிய ரஜமகா விஹாரையின் பேணல் ஒக்டோபர் மாதத்தில் தொடங்கப் பட்டன.

இதற்கு மேலதிகமாக அலுவலகக் கட்டடத்திற்கு புதிய பகுதியொன்றை நிர்மாணித்தல் மற்றும் அதன் வசதிகளை முன்னேற்றகரமாக்குதல், காவற் கூடமொன்றை அமைத்தல் அத்துடன் அலுவலக வளவில் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

பண்டுவஸ்நுவர வேலைத்தலம்

அகழ்வுப்பிரிவு

நிக்கசலாநுவர ரஜமகா விஹாரையின் 02 பழைய கட்டடங்கள் (NNB1, NNB2), அதன் பண்டைய வாயில்களும் பெருஞ்சுவரும், பண்டுவஸ்நுவர ரஜமகாவிஹாரையின் பிரிவேனா மற்றும் ஆசிரத்திற்கு இடையில் உள்ள இடிபாடடைந்த கட்டிடம் அகழப்பட்டது. இவற்றில் NNB1 அகழ்வுகள் நிறைவு செய்யப்பட்டன.

NNBI ஆராய்வு ஆரம்பிப்பதற்கு முன

NNBI ஆராய்வு ஆரம்பித்ததன் பின்

ஆராய்வின் ஊடாக பெற்றுக்கொண்ட விஷேட அம்சங்கள்

<u>பேணல் பிரிவு</u>

இதன்கீழ் 04 பேணல் பணிகள் முன்மொழியப்பட்டிருந்த போதிலும் அவசியமான தொழிலாளர்களும் மேற்பார்வை உத்தியோகத்தர்களும் இல்லாமையால் ஆரம்பிக்க இயலாமல் போயிற்று.

சுவரோவியம் பேணலின் கீழ் நிக்கசலாநுவர ரஜமகாவிஹாரையின் குகை மற்றும் பண்டுவன்நுவர ரெம்பிற்ற விஹாரையின் பேணல் பணிகள் இடம்பெற்றன.

<u>குருநாகல் வேலைத்தளம்</u>

<u>அகழ்வுப் பிரிவு</u>

ரிதீ விஹாரையின் பண்டைய கல்லறை அகழ்வு நிறைவு செய்யப்பட்டமை

புராதன கல்லறைகளை ஆராய்வு செய்வதற்கு முன்

.

புராதன கல்லறைகளை ஆராய்வு செய்ததன் பின

<u>பேணல் பிரிவு</u>

அலங்காரக்கல் வரையிலான படிக்கட்டின் இருபுறத்திலும் கல்மதில் மற்றும் அகழ்வு நிறைவு செய்யப்பட்ட பண்டைய கல்லறையின் பேணல் பணிகள் தொடங்கப்பட்டன.

செரசும்கல படிகற்களின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு முன

செரசும்கல படிகற்களின் பாதுகாப்பு நடவடிக்கைக்கு பின

இதற்கு மேலதிகமாக கருத்திட்டத்திற்கான மலசலகூடங்களை அமைத்தலும் மேற் கொள்ளப்பட்டது.

கருத்திட்ட நிலப்பரப்பின் பராமரிப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / **My No** } டீஎம்/ஏ/சீசீஎப்/ 2012/எப்ஏ   ඔබේ අංකය / உமது இல / Your No. }   දිනය / திகதி / Date } 2013 டிசெம்பர் 23

பணிப்பாளர் நாயகம்,
மத்திய கலாசார நிதியம்

மத்திய கலாசார நிதியத்தின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீது 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச் சட்டத்தின் 9(4) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

மத்திய கலாசார நிதியத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினது பொழிப்பினை உள்ளடக்கிய 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மத்திய கலாசார நிதிய அதிகாரச் சட்டத்தின் 9(4) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / **Telephone.** } 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / **Fax No.** } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / **E-mail.** } **oaggov@sltnet.lk**

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிசார் கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, மத்திய கலாசார நிதியத்தின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் (இஅதுகநி)

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 106 ஆம் பந்தியின் பிரகாரம் செலவின விடயம் போதுமானதாக இருப்பின் அது தொடர்பாக நிதிசார் செயலாற்றல் கூற்றில் வேறாக வெளிக்கொணரப்பட வேண்டும். எனினும், முறையே ரூபா 318,880,051, ரூபா 56,299,899 மற்றும் ரூபா 27,825,804 ஆகிய அகழ்வு மற்றும் பாதுகாப்புச் செலவினமும் அனுமதிச் சீட்டு அச்சிடல் செலவினம் மற்றும் எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய்ச் செலவினம் என்பன நிதிசார் செயலாற்றல் கூற்றில் வெவ்வேறாக வெளிக்கொணரப்படவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சுனாமி நூதனசாலை நிர்மாணத்திற்கெனக் கொள்வனவு செய்யப்பட்ட காலி நுகஹவத்த காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. 2005 ஆம் ஆண்டில் அக் காணியைக் கொள்வனவு செய்தபோது அதன் பெறுமதி ரூபா 2,558,000 ஆகவிருந்தது.

(ஆ) சீகிரிய செயற்திட்டத்தின் சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காக ஜப்பானிய அரசாங்க உதவியாக 2009 ஆம் ஆண்டில் பெறப்பட்ட வாகனம் இறக்குமதி செய்யப்படுகையில் கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்ட வரி மற்றும் களஞ்சியவறைக் கட்டணமாகிய ரூபா 5,067,106

மாத்திரம் அவ்வாகனத்தின் பெறுமதியாக மூலதனமாக்கப்பட்டிருந்தது. வாகனப் பதிவேட்டின்படி அதன் பெறுமதி ரூபா 8,500,000 ஆகக் காட்டப்பட்டிருந்தது. வாகனத்தின் நியாயமான பெறுமதியைக் கணிப்பிட்டு அதனைக் கணக்கிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) வெளிநாட்டு உதவி மானியமாக 1984 தொடக்கம் 2004 வரையான காலப்பகுதியின்போது பெறப்பட்ட 21 வாகனங்களில் காப்புறுதி செய்யப்பட்ட ரூபா 5,823,900 பெறுமதியுடைய 15 வாகனங்களது நியாயமான பெறுமதியைக் மூலதனமாக்குவதற்கு மீளாய்வாண்டு முடிவு வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) 1982 தொடக்கம் இருந்து வருவதும் தற்போது முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியதுமான ரூபா 102,397,951 கிரயமுடைய தளபாடங்கள், பொலித்தீன் உபகரணங்கள் என்பவற்றின் நிகழ் பெறுமதியைத் தீர்மானித்து சரியான பெறுமதியை கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) நிதியத்திற்குச் சொந்தமான 117 வாகனங்களில் 98 வாகனங்கள் மீளாய்வாண்டு முடிவில் 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தேய்மானம் முடிவற்றனவாகும். அந்த 98 வாகனங்களில் 34 வாகனங்கள் 2012 ஆம் ஆண்டின்போது மீள மதிப்பிடப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தன. எனினும், ரூபா 15,512,727 கிரயமுடைய 64 வாகனங்களை மீள மதிப்பீடு செய்து அதனைக் கணக்கிலிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) கெப் வண்டி ஒன்றினது மீளமதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 1,250,000 எனக் கணக்கிலிடப்பட்டிருந்தது. எனினும், அக் கெப் வண்டி மதிப்பிடப்பட்டு அறிக்கைகளில் உள்ளடக்கப்படவில்லை.

(எ) பொலனறுவை புண்ணிய பூமியின் உள்ளக அனுகு பாதைக்கு சீமெந்து கொங்ரீட் கற்கள் பதித்து அதனைத் திருத்தியமைப்பதற்கு மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 4,548,648 பாதுகாப்புச் செலவினத்தின் கீழ் காட்டப்படாது கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது. இதற்கமைய, நிதசார் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறித் தொகுதி, உபகரணங்கள் என்பவற்றின் பெறுமதி அதேயளவு தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலை முடிவடையாதிருந்த 2 நிர்மாண வேலை ஒப்பந்தங்கள் தொடர்பாக ஆண்டின்போது ரூபா 414,149 மற்றும் ரூபா 139,686 என்பன நடைபெறும் வேலை எனக் கணக்கிலிடப்படாது குறித்த சொத்துக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு அவை மூலதனமாக்கப்பட்டிருந்தன.

(ஐ) 2009 ஆம் ஆண்டின்போது ஊழியர் சேமலாப நிதிய உதவு தொகையைச் செலுத்தத் தாமதம் ஆகியமையால் கொடுப்பனவு செய்ய வேண்டியேற்பட்ட ரூபா 3,731,926 தண்டப்பணம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2011 ஆம் ஆண்டு தொடக்கம் அதற்கு முன்னரான 12 ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டியேற்பட்ட ரூபா 1,782,000 என்பன தொடர்பாக அவ்வாண்டுகளிலேயே நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாது மீளாய்வாண்டின் செலவினமாக அவை எதிரீடு செய்யப்பட்டமையால் ஆண்டிற்கான மிகை ரூபா 5,513,926 குறைவடைந்திருந்தது.

(ஒ) ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் தொங்கற் கணக்கு மீதியாகிய ரூபா 71,766 தொங்கற் கணக்கு ஒன்றில் காட்டப்படாது சில்லறைக் கடன்பட்டோரில் உள்ளடக்கப்பட்டுக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

2.2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக 24 நிரந்தர ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாகவுள்ள ஒருங்கிணைந்த கடன் மீதியாகிய ரூபா 720,663 நிரந்தர ஊழியர்கள் அல்லாத தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு 5 ஆண்டுகளைக் கடந்து விட்ட இடுக்கன் கடன் மீதியாகிய ரூபா 366,721 என்பன 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாது நிலுவையாக இருந்தன.

(ஆ) நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பெற வேண்டிய கணக்குகளில் உள்ளடங்கிய 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட விழா மற்றும் விசேட முற்பண மீதிகளான ரூபா 1,289,871 தொகையானது 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியன்றும் அறவிடப்பட முடியாது தொடர்ந்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(இ) தலைமை அலுவலகத்திற்கும் சீகிரிய செயற்திட்ட அலுவலகத்திற்கும் வழங்கப்பட்ட ரூபா 504,465 முற்பணமானது 2 ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்த்து

வைக்கப்படாதிருந்தன. 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீதிமன்ற வைப்பு மீதியான ரூபா 44,534 அறவிடப்பட வேண்டிய மீதியாக நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அறிவிடப்படாதிருக்கும் ரூபா 526,610 கடன்பட்டோர் மீதியானது நடப்பாண்டு முடிவில் தொடர்ந்து நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

2.2.4 கணக்காய்விற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

கீழே காணப்பட்ட ஒவ்வொரு கணக்கீட்டு விடயத்திற்குமெதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்று சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

விடயம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்று
	ரூபா	
விசேட நிதிய மீதி	5,797,169	ஏழு விசேட நிதிய மீதிகளது பெறுமதியின் பிழையற்ற தன்மையை உறுதி செய்வதற்கான சான்று
நடைமுறைச் சொத்து – சில்லறைக் கடன்பட்டோர்	1,060,752	இரண்டு முதல் 5 ஆண்டு கால வரையிலான கடன்பட்டோரின் விரிவான பட்டோலை
நடைமுறையல்லாத சொத்து – செயற்திட்ட அலுவலக முற்பணம்	4,604,220	விரிவான பட்டோலை
நிலுவையாகவுள்ள ஊழியர் கடன்	2,377,255	காலப் பகுப்பாய்வு
மேற்படி	1,289,871	விரிவான பட்டோலை

2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை
(அ) நிதிப்பிரமாணம்	
372(2)	குறித்த பணி முடிவடைந்ததும் இடைக்காலக் கட்டு நிதி தீர்த்து வைக்கப்பட வேண்டும். எனினும், நிறுவனத்தின் 10 பேர் 12 சந்தர்ப்பங்களில் பெற்ற ரூபா 593,040 இடைக்காலக் கட்டு நிதியைத் தீர்த்து வைப்பதற்கு 2 முதல் 8 மாத காலம் ஆகியிருந்தது.
(ii) 685	அனுராதபுரம், பொலநறுவை, சீகிரிய புனித இடங்களை உள்ளடக்கிய ஆவணத் திரைப்படம் ஒன்றைத் தயாரிப்பதற்கு கேள்வி நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது, தயாரிப்பாளர் ஒருவருடன் ரூபா 4,701,000 தொகையில் ஒப்பந்த உடன்படிக்கை செய்யப்பட்டது.
(ஆ) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை	
5.3.1 (ஈ)	2012 ஆம் ஆண்டின்போது ரூபா 2,898,313 பெறுமதியான 34 கணனிகளும் 17 கணணி UPS களும் கொள்வனவு செய்யப்படுகையில் பொருட் கொள்வனவிற்கெனத் தயாரிக்கப்பட்ட கேள்விகளைக் கோரும் சகல ஆவணங்களும் தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பொருட் கொள்வனவுக் குழு என்பவற்றால் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டுமாயினும், அவ்வாறு நடைபெறவில்லை.

5.3.1 (ஈ) மற்றும் 6.3.6	நூலகப் புத்தகங்களை வைப்பதற்கு ரூபா 675,000 செலவு செய்து 20 தேக்கு அலுமாரிகள் கொள்வனவு செய்யப்படுகையில், கேள்விகள் ஆவணங்கள் என்பன தொழில் நுட்ப மதிப்பாய்வுக் குழுவாலும் பொருட் கொள்வனவுக் குழுவாலும் பரிசீலிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. அவ்வாறே, கேள்விகளைத் திறப்பதற்கான நடவடிக்கை குறித்த மாதிரிப் படிவத்தில் அமையவுமில்லை.

2.2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் கலாசார மற்றும் கலை நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளர் உத்தியோகபூர்வ ரீதியாக நிதியத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தராக அமைவதுடன், அப்பதவிக்கு படி வழங்கப்படுவதற்கு அதிகாரச்சட்டத்தின் மூலம் நிதியேற்பாடு இருக்கவில்லை. எனினும், நிதியம் அமைச்சின் செயலாளருக்கு மாதாந்தம் அவரது சம்பளத்தில் 331/3 சதவீதமான ரூபா 20,113 வழங்கி வந்ததது. இதன் பொருட்டு தாபன விதிக் கோவையின் அத்தியாயம் IX பிரிவு 1.2 மற்றும் 1999 மே 4 ஆந் திகதிய 374 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தாபனப் பணிப்பாளர் மற்றும் திறைசேரியினது அங்கீகாரம் பெறப்படவில்லை.

(ஆ) அநேக ஆண்டுகளாகப் பெற வேண்டிய மீதியாக முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் 9 நானாவித வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 152,252 தொகை மூன்று சம்பள முற்பணக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 24,616 தொகை காலங் கடந்த 3 முற்பண மீதிகளது கூட்டுத் தொகையான ரூபா 141,791 தொகை 8 பண மோசடிகள் தொடர்பான ரூபா 1,472,848 தொகை என மொத்தமாக ரூபா 1,791,507 தொகை திறைசேரியின் அங்கீகாரம் பெறப்படாது அறவிட முடியாக் கடனாக மீளாய்வாண்டின் கணக்குகளில் பதிவழிக்கப்பட்டிருந்தன.

(இ) மாதாந்நம் ரூபா 50,000 வீதம் எரிபொருள் படியாக கலாசார மற்றும் கலை நடவடிக்கைகளுக்கான அமைச்சருக்கு வழங்குவதற்கு 2012 ஆம் ஆண்டில் ரூபா 600,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) கலாசார அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வீட்டுத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு 2012 ஆம் ஆண்டின்போது ரூபா 177,130 செலவிடப்பட்டிருந்தது.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் விளைவுகள்

நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டினால் ஏற்பட்ட மிகை ரூபா 227,294,733 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 235,009,985 உடன் இதனை ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 7,715,252 குறைவு தென்படுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுற்றுலாத்துறை அனுமதிச் சீட்டு விற்பனை வருமானத்தில் ரூபா 321,556,476 முதலீட்டு வருமானத்தில் ரூபா 25,383,472 என அதிகரிப்புகள் ஏற்பட்டுள்ளபோதும், நிதியத்தின் செயற்பாட்டுச் செலவின அதிகரிப்பு ரூபா 302,590,118 ஆகியமை நிதிசார் விளைவுகளில் குறைவு ஏற்படக் காரணமாயிற்று

3.2 பகுப்பாய்வுடன் கூடிய மீளாய்வு

(அ) மீளாய்வாண்டின்போது வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருள் செலவின அதிகரிப்பு ரூபா 114.9 மில்லியன் அல்லது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 164.7 சதவீதமாயிற்று. ஏனைய செலவின அதிகரிப்பு ரூபா 71.06 மில்லியன் அல்லது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 138.9 சதவீதமாயிற்று சம்பளங்களும் கூலிகளும் ரூபா 156.7 மில்லியன் அல்லது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 26 சதவீதமாயிற்று. இதன் காரணமாக, நிதிசார் விளைவுகளில் நூற்றுக்கு 3.28 சதவீத குறைவு அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுற்றுலாத் துறை அனுமதிச் சீட்டை அச்சிடுவதற்கு மீளாய்வாண்டின்போது செலவிட்ட தொகை ரூபா 56,299,899 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதற்கான செலவின அதிகரிப்பு நூற்றுக்கு 2291 சதவீதமாகும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் நிதியம் அமுலாக்குவதற்கு இலக்கிடப்பட்ட பின்வரும் பணிகள் மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்படவில்லை.

விபரம்	இலக்கு		உள்ளபடியான செயலாற்றல்	
	வேலைக்களம்	கூறு	வேலைக்களம் %	கூறு %
அகழ்வுகள்	08	2856	ஆரம்பிக்கப்படவில்லை	
பாதுகாப்பு	14	4362	- மேற்படி -	
கதிர்காமம் நூதன சாலை அவசர பாதுகாப்பு	-	145	- மேற்படி -	

(ஆ) 2012 ஆம் ஆண்டில் நிதியம் அமுலாக்குவதற்கு இலக்கிடப்பட்ட பின்வரும் அகழ்வுகள் மற்றும் பாதுகாப்புப் பணிகளில் மீளாய்வாண்டு முடிவில் எதிர்பார்த்த இலக்கில் 71 சதவீதமே பூர்த்தியாகி இருந்தது.

விபரம்	இலக்கு			உள்ளபடியான செயலாற்றல்	
	வேலைக்களம்		கூறு	வேலைக்களம் %	கூறு %
அகழ்வுகள்	82	233	193521	42 18	137893 71
பாதுகாப்பு	151				

(இ) அவசர பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்குதல், ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிலாளர் பற்றாக்குறை, கேள்விகளுக்கான தீர்மானத்தில் தாமதம், வளங்களது

பற்றாக்குறை, அதிக மழை ஏற்பட்டமை போன்ற காரணங்களால் மேற்படி அகழ்வுகளும் பாதுகாப்பும் தாமதமாகின.

4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பாவனையிலிருந்து நீக்கப்படுவதற்குச் சிபார்சு செய்யப்பட்ட நான்கு வாகனங்களை ஏலத்திலிட மீளாய்வாண்டு முடிவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பொலனறுவை "ஆதித்ய" இல்லம் சுற்றுலா விடுதியாகப் பழுதுபார்க்கப்படுவதற்குகான ஒப்பந்த வேலை ரூபா 7,289,264 க்கு ஒரு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. பழுதுபார்த்தல் நியமப்படி நடைபெறவில்லை. ஒப்பந்தக்காரரால் குறைபாடுகளைத் திருத்த நடவடிக்கை எடுக்காது 2012 ஒக்டோபர் 24 அன்று ரூபா 1,926,514 இறுதிக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2012 சனவரி 01 முதல் புதிய வெளிநாட்டவர்க்கான சுற்றுலாத்துறை அனுமதிச்சீட்டு சீகிரிய, பொலநறுவை, அனுராதபுரம் செயற்திட்டங்களுக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்படுமென மத்திய கலாசார நிதியப் பணிப்பாளர் நாயகத்தினால் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காது பழைய சுற்றுவட்ட வெளிநாட்டவர் சுற்றுலாத்துறை அனுமதிச்சீட்டு மேலும் அச்சிடப்பட்டிருந்தது. அந்த அனுமதிச்சீட்டுக்கள் 2994 ஆகும். அவை 2012 ஜனவரி 01 க்குப் பின்னர் விற்பனை செய்யப்பட்டிருந்தன. அதற்கமைய, புதிய அனுமதிச் சீட்டுக்களது விலையிலும் குறைவாக சுற்று வட்ட அனுமதிச்சீட்டு விற்பனை செய்யப்பட்டமையால் ரூபா 10,329,300 நட்டம் ஏற்பட்டிருந்தது. அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

4.3. செயற்பாட்டு வினைத்திறமையின்மை

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொல்பொருள் அகழ்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட அபயகிரிய நூதனசாலையில் வைக்கப்பட்டிருந்த 18 வகையான 517 தொல்பொருட்கள், அபயகிரிய

செயற்திட்டத்தின் விசேட தொல்பொருளாக பாதுகாப்புப் பெட்டகங்களில் வைக்கப்பட்டிருந்த தங்க, வெள்ளி, வெண்கல, பளிங்கு, மாணிக்க மற்றும் பிற உலோகப்பொருள் வகைகளுக்குரிய பண்டங்கள் மற்றும் பண்டங்களது 218 துண்டுகள் என தொல்பொருட்கள் பெருமளவில் 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் எதுவத பரீசீலனைக்கும் உட்படுத்தப்பட்டு பதிவு செய்யப்படாதிருந்தன.

(ஆ) 1978 ஆம் ஆண்டில் தீவிற்கு வருகை தந்த கபிலவஸ்து புனித தந்தப் பொருட்கள் பூஜிக்கப்பட்டதன் பின்னர் மத்திய கலாசார நிதியதிட்டம் ஒப்படைக்கப்பட்டு ஏறக்குறைய 424 தங்க மற்றும் பிற ஆபரணங்கள், புதைபொருள் பொருட்களுக்கான ஏறக்குறைய 294 தங்க மற்றும் பிற ஆபரணங்கள் மற்றும் பண்டங்கள், ஆபரணங்களும் பண்டங்களுமாக 42 பொருட்கள், 42 பூசைகளுக்கான பண்டங்கள் என்பன இனங்காணப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு முடிவில் அப் பண்டங்களைப் பரீசீலித்து பெறுமதி கணித்து, அவற்றைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) அபயகிரிய செயற்திட்டப் பிரதேசத்தில் 2085 உள்ளூர் ஓடுகள், 3725 வர்ண ஓடுகள், 2175 திருகு ஆணிகள், 133 கொழுவிகள் அடங்கலாக பிற களஞ்சியப் பொருட்கள் நெடுங்காலமாக மேலதிக கையிருப்புப் பொருட்களாக இருந்தன.

(ஈ) அபயகிரிய தூப செயற்திட்டத்தில் கழற்றி அகற்றப்பட்ட இரும்புக் குழாய்கள், கப்லின், பலகைகள், 500 வொட் ஹெலஜன் விளக்குகள் மற்றும் பிற களஞ்சியப் பொருட்கள் என்பன செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் வெளி நபர்களது தனிப்பட்ட பாவனைக்கு முறையான அனுமதியின்றி வழங்கப்பட்டிருந்தன. அவை வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பொருட்களை எடுத்துச் சென்று மீண்டும் திருப்பி ஒப்படைக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) "சீகிரியா கலாசார நோக்குடனான சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான செயற்திட்டத்தின்" (The Project of culture Oriented Tourism Promotron in sigiriya) கீழ் வருகை தருபவர்களை இளைப்பாறச் செய்தும் வசதிகளை வழங்குவதற்குவெனப் பெறப்பட்ட ரூபா 4.5 மில்லியன் விசேட நிதியாகக் கணக்கிலிடப்படாது அரசாங்க மாணியத்தின் கீழ் வருமானமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மத்திய கலாசார நிதியத்தின் தற்போதைய தலைமை அலுவலகக் காணியின் சட்டபூர்வ உரித்து நிதியத்திற்கிருக்கவில்லை. அதற்கெனக் காணி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு 2012 ஆம் ஆண்டில் கேள்விகள் கோரப்பட்டு குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறிருக்க, தற்போதைய பிரதான அலுவலகக் காணியின் ஏறக்குறைய ரூபா 9,641,843 மதிப்பிடப்பட்ட பெறுமதியில் நிரந்தர பழுதுபார்த்தல் மற்றும் புதிய நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அதன் பொருட்டு 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,420,370 செலவிடப்பட்டிருந்தது.

(ii) பழுதுபார்க்கப்பட வேண்டியன அல்லது புதிய நிர்மாண வேலைகள் தொடர்பான ஆரம்ப ஆய்வுகளின் மூலம் இனங்காணப்படாது நிர்மாணப் பணி தொடங்கப்பட்ட மேற்படி செலவினத்துடன் தொடர்புடைய மொத்தக் கிரய மதிப்பீடானது நிர்மாணப் பணி தொடர்பாக ஓராண்டின் பின்னரே தயாரிக்கப்பட்டிருந்தது.

(iii) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.8 வழிகாட்டிக்கு முரணாக அவசரத் தேவையெனக் கருதப்பட்டு ரூபா 4,420,370 கூட்டுத்தொகையுடைய நேரடிக் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) மொத்தக் கிரய மதிப்பீட்டிற்கான ஆளுநர் சபை அங்கீகாரம் பெறப்படவில்லை. குறித்த நிர்மாணப் பணி எந்தவொரு தொழில் நுட்ப உத்தியோகத்தரதும் மேற்பார்வைக்கு உட்படவில்லை.

(ஆ) தொழிலாளர்களைப் பெறுதல்

ஆளுநர் சபையின் அங்கீகாரத்தைப் பெறாது நிதியமானது கம்பனி ஒன்றிலிருந்து தொழிலாளர்களைப் பெறுவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் 2012 மே 31 அன்று ஈடுபட்டிருந்தது. 2012 ஜுன், ஜுலை, ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் அவ்வாறாக 26,990 மனித நாட்களுக்கான வேலைக்கென ரூபா 32,388,000 அக்கம்பனிக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(i) அக்கம்பனி ஒப்பந்த அடிப்படையில் தொழிலாளர்களை வழங்குவதற்குப் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லதென்பதுடன் வழங்கிய ஊழியர்களும் கம்பனியில் தொழில் புரிபவர்கள் அல்லர்.

(ii) வயம்ப கலாசார முக்கோண நடவடிக்கைகளை துரிதமாக முடிப்பதென குறிப்பிடப்பட்டு இவ்வூழியர்கள் பெறப்பட்டபோதும், அவர்கள் மத்திய கலாசார நிதிய தலைமை அலுவலகத்திலும் ஏனைய சேவை நிலையங்களிலும் பணியில் அமர்தப்பட்டிருந்தனர். மேலும் தொழிலுக்கான தேவையைக் குறிப்பிடும் மதிப்பீடும் இருக்கவில்லை.

(iii) அக் கம்பனியை அமைப்பதற்கான அமைச்சரவைக் குறிப்பு மற்றும் அதற்கான அமைச்சரவை அங்கீகாரம் என்பவற்றின் பிரகாரம் மத்திய கலாசார நிதிய ஊழியர்கள் அக்கம்பினியால் பணியில் ஈடுபடுத்தப்படுவதும். அவர்களுக்கு சம்பளம் வழங்குதல் என்பன கம்பனியால் வழங்கப்படுதலும் கம்பனி நிறுவப்பட்ட நோக்கமாயினும், அந் நோக்கத்திற்கு மாறாக மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றிருந்தன.

(iv) வயம்ப கலாசார முக்கோண நடவடிக்கைகளுக்கு அக்கம்பனியிலிருந்து பெறப்பட்ட தொழிலாளரது ஒரு நாளுக்கான மனித வேலைக்கு நிதியம் அக் கம்பனிக்கு வழங்கிய தொகை ரூபா 1,200 ஆகும். கம்பனி ஊழியர்களுக்கு வழங்கிய தொகை ரூபா 700 ஆகும். ஆகவே, ஒரு தொழில் நாளின் பொருட்டு கம்பனி ரூபா 500 இலாபமீட்டும் விதத்தில் மத்திய கலாசார நிதியம் உடன்படிக்கையில் ஈடுபட்டமையால் 2012 ஜுன் முதல் செப்டெம்பர் வரை 26,990 மனித நாட்களுக்குக் கம்பனி ரூபா 13,495,000 பெறக்கூடியவாறு வசதியளிக்கப்பட்டிருந்தது.

(இ) ஏனைய கலாசார செயற்பாடுகள்

ஏனைய செலவினங்களின் கீழ் ஏனைய கலாசார செயற்பாடுகளுக்காக ஆண்டின்போது செலவிட்ட தொகை ரூபா 32,915,635 ஆகும். எவ்வாறாயினும், அவ்விடயத்தின் கீழ் மேற்கொண்ட செலவினம் தொடர்பாக குறித்தவொரு அர்த்தத்தை இனங் காண்பது, அதற்கான அளவு கோல்கள் மற்றம் வருடாந்த நட்டம் என்பன தயாரிக்கப்படவில்லை.

(ஈ) **“அபே அபிமானய” எனும் ஆவணத் திரைப்படம்**

மத்திய கலாசார நிதியத்தின் செயற்திட்டங்களைப் பார்வையிடும் சுற்றுலாப் பணிகளுக்குக் காண்பிப்பதற்கான நோக்குடன் 2011 ஆம் ஆண்டின்போது ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 5,191,150 செலவழித்து. அனுராதபுரம், பொலநறுவை, சீகிரியா ஆகிய இடங்களை உள்ளடக்கியதாக “அபே அபிமானய” எனும் 3 ஆவணத் திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும், 2012 ஆம் ஆண்டு முடிவிலும் அத் திரைப்படங்கள் பொது மக்களுக்குக் காண்பிக்கப்படவோ அல்லது ஒளிபரப்பப்படவோ இல்லை.

எனினும், இவ்வாறான 3 திரைப்படங்களைத் தயாரிப்பதற்கு உடன்பட்ட முன்னைய தயாரிப்பாளருடன் மீண்டும் ரூபா 2,536,000 களுக்கான உடன்படிக்கை ஒன்று 2012 டிசெம்பர் 21 ஆந் திகதியன்று செய்து கொள்ளப்பட்டது.

(உ) **வானூர்தி நுழைவுச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்தல்**

கலாசார மற்றும் கலை நடவடிக்கைகள் அமைச்சர் உள்ளடங்களாக 4 பேரினது இத்தாலி நாட்டிற்கான வானூர்தி பயண நுழைவுச் சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு, கலாசார அமைச்சிடமிருந்து மீளளிப்பைப் பெறும் அடிப்படையில் நிதியமானது ரூபா 1,187,200 செலவழித்திருந்தது. இத்தொகை 2013 செப்டெம்பர் 30 ஆந் திகதியளவிலும் அவ்வமைச்சிடமிருந்து மீளளிப்புச் செய்யப்படவில்லை. அது ஆண்டிற்கான செலவினமாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது. இவ் வானூர்தி அனுமதிச் சீட்டுக்கள் தொடர்பான காசோலைகள் குறித்த வானூர்திக் கம்பனியின் பெயரில் வரையப்படாது வேறொரு கம்பனியின் பெயரில் இருந்தது.

4.5 வெளிப்படையான முறைகேடுகள்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொலநறுவை புனித பூமியின் உள்ளக நுழைவுப் பாதையின் 1 கி.மீ தூரத்திற்கு கற்கள் பதித்துத் திருத்தஞ் செய்யும் ஒப்பந்தம் ரூபா 38,709,100 இற்கு நேரடி

வேலையாக நிர்மாண வேலைக் கம்பனி ஒன்றிடம் 2012 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிர்மாண வேலைகளுக்குப் பயன்படுத்திய கொங்கீரீட் கற்கள் முறையான நியமத்திற்கு அமையவில்லை என அரசாங்க கணக்காய்வு மற்றும் கலாசார மற்றும் கலை நடவடிக்கைகளுக்கான அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் உறுதி செய்திருந்தன. முறையான நியமத்திற்கு அமையாத அக்கற்களுக்கு ரூபா 22,099,917 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கணக்காய்வு நேரடிப் பரிசோதனையில் புலனாகியவாறு அளவுப் பட்டியலின் 1,2 மற்றும் 5 ஆம் விடயங்களில் செய்யாத வேலைகளுக்கு ரூபா 4,660,998 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) செங்கற்களைப் பதிப்பதற்கு முன்னர் 40 சதவீத ABC கற்கள் மற்றும் 50 சதவீத கற்துகள் கலவை என்பன குறைவாகப் பயன்படுத்தியமையால் வீதி சம நிலையற்று அநேக இடங்களில் குழிவிழ ஆரம்பித்திருந்தது.

4.6 இனங்காணப்பட்ட இழப்புகள்

ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த நிறுவனம் நடவடிக்கைகளில் ஈடுபடாது போனமையால் முற்பணப் பிணை முறி மற்றும் செயலாற்றல் பிணை முறி என்பன இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர் அத்தொகையை அறவிடுவதற்கு நிதியம் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது போனது அதனால் 2000 ஆம் ஆண்டிலும் 2001 ஆம் ஆண்டிலும் தனியார் கம்பனிக்குக் கொடுப்பனவு செய்த ரூபா 325,000 மற்றும் ரூபா 1,382,055 என மொத்தமாக ரூபா 1,707,055 அவ்வாண்டுகளிலிருந்து தீர்த்து வைக்கப்படாத முற்பணமாக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. ஒரு கம்பனியிடமிருந்து ரூபா 1,382,055 அறவிடப்படுவதற்குத் தொடுக்கப்பட்ட வழக்கின் தீர்ப்புக்கமைய நிதியத்திற்கு ரூபா 4,472,150 வழங்குமாறு 2011 ஜுன் 30 அன்று கம்பனிக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்ட போதும், 2012 டிசெம்பர் 31 ஆம் திகதியளவிலும் அத்தொகை அறவிடப்படாதிருந்தது.

4.7 பிற அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியத்தின் வளங்கள்

1997 ஜனவரி 24 ஆந் திகதிய 116 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையைப் பிரகாரம் பொது முயற்சிகளது நிதிசார் வளங்கள் அடங்கலாக பிற வளங்களின் மேற்பார்வையானது அமைச்சிடம் வழங்கப்படலாகாது எனினும், 1989, 2000, 2001, 2005 2009, 2011 ஆம் ஆண்டுகளில் கலாசார மற்றும் கலை நடவடிக்கைகள் அமைச்சிற்கு பணியாற்றுவதற்கு விடுவிக்கப்பட்ட மத்திய கலாசார நிதியத்தின் 9 பதவியணியினர் 2012 ஆம் ஆண்டின்போது அமைச்சின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். 2012 ஆம் ஆண்டில் நிதியத்தால் அவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தச் சம்பளம் ரூபா 3,694,912 ஆகும். அவ்வாறே, 2012 ஒக்டோபர் 01 முதல் 15 வரையான காலப்பகுதியின்போது மேற்படி சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்துரைகளுக்கு முரணாக 2 வாகனங்கள் கலாசார மற்றும் கலை நடவடிக்கைகளுக்கான அமைச்சரின் தேவைகளுக்குச் சாரதியுடனும் எரிபொருளுடனும் வழங்கப்பட்டிருந்தன.

4.8 பதவியணியினர் நிர்வாகம்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கபப்பட்ட பதவியணித் தொழிலாளர்களது எண்ணிக்கை 322 ஆகும். எனினும், 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிரந்தர தொழிலாளர்களது எண்ணிக்கை 811 ஆகும். அத்துடன் 315 வெளி இடத் தொழிலாளர்கள் சமயாசமய மற்றும் தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தப்பட்டிருந்தனர். இவற்றை விட, 2012 ஆம் ஆண்டின்போது கம்பனி ஒன்றின் 450 தொழிலாளர்களும் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர்.

நிறுவனத்தின் தேவைகளுக்கேற்ப குறித்த எண்ணிக்கையிலான தொழிலாளர்களைப் பதவியணியில் இணைத்து சம்பள மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழுவின் சிபார்சு மற்றும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் பெறப்படாதிருந்தது.

(ஆ) நிதியத்தின் சிரேட்ட பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்பாது அப்பதவிகளில் பதில் கடமையாற்றுவதற்கு 14 உத்தியோகத்தர்கள் 1 முதல் 3 ஆண்டுகளாக நியமிக்கப்பட்டிருந்தனர். 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அவர்கள் அப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். பதில் கடமை ஆற்றுவதற்குப்

படியாக 2012 ஆம் ஆண்டில் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 632,090 ஆகும்.

4.9 வாகனப் பாவனை

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கலாசார அமைச்சின் ஜீப் வண்டி ஒன்று 2005 ஆம் ஆண்டு முதல் மத்திய கலாசார நிதியத்தின் உபயோகத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் அதனை முறையாகப் பொறுப்பபேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2012 மே 31 அன்று ரூபா 7,900,000 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட டபள் கெப் வாகனமொன்று அமைச்சரின் வாகனக் குழாமில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அது முறையாகப் பொறுப்பேற்கப்படவில்லை. மேலும், பொதுச் செலவின முகாமைத்துவம் தொடர்பான சனாதிபதியின் செயலாளரது 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்கக் கடிதத்தின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம் அதற்கென நிதி மற்றும் கொள்ளத் திட்டமிடல் அமைச்சின் முன்கூட்டிய அங்கீகார பெறப்படவில்லை. அவ்வாறே, அவ் வாகனத்தின் பயனங்களுக்கான ஓட்ட அட்டவணைகளோ மாதாந்தப் பொழிப்புகளோ பேணப்படவுமில்லை.

5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2013 மே 13 அன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதிசார் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும், அந் நிதிசார் கூற்றுக்களுக்கு பணிப்பாளர் சபையின் முன்கூட்டிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிதிசார் கூற்றுக்களின் பொறுப்பு அவற்றை பணிப்பாளர் சபையால் பொறுப்பேற்கப்பட வேண்டுமாயினும் அவ்வாறாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

5.2 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டச் சுற்றிக்கைப் பிரகாரம், அரசாங்க நிறுவனங்களினால் தனது வருடாந்தக் கொள்வனவுக் தேவைகளுக்கெனக் கொள்வனவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதற்கமைய

முன்னுரிமை அடிப்படையில் கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டும். எனினும், 2012 ஆம் ஆண்டின்போது அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

5.3 வரவு, செலவுத்திட்டக் கட்டுப்பாடு

2012 ஆம் ஆண்டின் பொருட்டு நிறுவனம் தயாரித்த திருத்தஞ் செய்யப்பட்ட வரவு, செலவுத்திட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் நிதசார் கூற்றுக்கள் என்பவற்றின் பிரகாரம் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் கணக்கிணக்கஞ் செய்கையில் 1 வருமான விடயத்திலும் 36 செலிவன விடயங்களிலும் 20 முதல் 329 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் அவ்தானிக்கப்பட்டமையால் வரவு, செலவுத் திட்டமானது சிறந்த நிதிசார் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) கணக்கீடு
(ii) ஒப்பந்த நிர்வாகம்
(iii) வாகனக் கட்டுப்பாடு
(iv) சுற்றுலாத்துறை அனுமதிச்சீட்டுப் பிரசுரமும் கையிருப்புக் கட்டுப்பாடு
(v) கொள்வனவு
(vi) ஊழியர் பதவியணி முகாமைத்துவம்

ஒப்பம் :- எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
A/Y

நிதிச் நிதி நிலைமையிலான கூற்று

சொத்துக்கள்	குறிப்பு	2012	2011
நடைமுறைச் சொத்துக்கள்		ரூ. சதம்	ரூ. சதம்
காசும் காசுக்கு சமமானவையும்	1	66,919,897	124,277,902
வருமதியானவை	2	31,725,169	16,787,112
பொருட் பதிவேடுகள்	3	62,111,327	54,048,304
முதலீடுகள்		-	50,000,000
		160,756,392	**245,113,318**
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
வருமதியானவை	4	149,067,966	141,484,821
விசேட நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள்		626,471	626,471
வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள்		676,432	-
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி	5	899,791,139	761,289,618
பணிக்கொடை முதலீடுகள்		361,689,060	70,650,358
		1,366,851,068	**974,051,268**
மொத்த சொத்துக்கள்		**1,527,607,460**	**1,219,164,586**
பொறுப்புக்கள்			
நடைமுறைப் பொறுப்புக்கள்			
சென்மதிகளும் அட்டுறுக்களும்	6	67,781,230	67,258,395
நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்			
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	7	367,413,407	342,773,911
விசேட நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள்	8	10,035,829	11,868,619
வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள்	9	2,800,566	20,579,053
மொத்தப் பொறுப்புக்கள்		**448,031,032**	**442,479,978**
நிகர சொத்துக்கள்		**1,079,576,429**	**776,684,608**
மூலதனம் பங்களிக்கப்பட்டவாறு			
திரண்ட நிதியம்		19,944,705	19,944,705
ஒதுக்கங்கள்		16,064,386	16,064,386
சொத்துக்கள், மீள்மதிப்பீட்டு ஒதுக்கங்கள்		451,428,000	353,250,000
வெளிநாட்டு வள நிதியம்		324,817,753	344,118,064
திரண்ட மிகைநிலை		**1,079,576,429**	**776,684,608**

ஒப்பம்	ஒப்பம்	ஒப்பம்
சரத் விஜேசேகர பத்திரண	**பேராசிரியர் காமினீ அதிகாரி**	**வசந்த ஏக்க நாயக்க**
பதில் நிதிப் பணிப்பாளர்	பணிப்பாளர் நாயகம்	பிரதம நிர்வாக உத்தியோகத்தர்

ஒப்பமிட்டது : 2013 மே மாதம் 08 ஆம் திகதி

செம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான
செயலாற்றுகை பற்றிய கூற்று

<u>வருமானம்</u>	<u>குறிப்பு</u>	<u>2012</u> <u>ரூ. சதம்</u>	<u>2011</u> <u>ரூ. சதம்</u>
அனுமதிச்சீட்டு விற்பனை	10	1,348,775,095	1,027,218,619
நினைவுப்பொருள் விற்பனைப் பங்களிப்பு	11	1,150,279	(352,748)
வெளியீடுகள் விற்பனைப் பங்களிப்பு	12	4,960,357	2,502,878
அச்சிடலிலாள பங்களிப்பு	13	462,561	5,200,781
அரசாங்க கொடை		34,500,000	25,000,000
கொடை முகவர்களிடமிருந்து வருமானம்		_	2,163,936
முதலீடுகளிலிருந்து வருமானம்		33,883,468	8,499,996
பிற வருமானம்		8,008,810	20,805,766
		1,431,740,570	**1,091,039,229**
<u>செலவுகள்</u>			
வேதனம், சம்பளம். ஊழியர் நன்மைகள்	14	759,032,384	602,331,975
பணிக்கொடை		31,636,288	71,239,003
தேய்மானம்		26,165,069	10,387,406
விற்பனை மேம்பாடும் மக்கள் தொடர்பும்		10,215,791	5,686,198
பாவிக்கப்பட்ட வழங்கலும் நுகர்வுகளும்		184,750,332	69,776,803
ஆதன, சாதன, பொறித்தொகுதி நலிவடைதல்		37,576,846	22,009,013
ஒப்பந்த அடிப்படயிலான சேவைகள்		32,531,571	22,682,340
நிதிசார் கிரயம்		112,345	584,243
கணக்காய்வுக் கட்டணங்கள்		200,000	175,000
பிற வருமானங்கள்	15	122,225,211	51,157,262
		1,204,445,836	**856,029,244**
ஆண்டுக்கான மிகை / (பற்றாக்குறை)		**227,294,733**	**235,009,985**

<u>காசுப்பாய்வுக் கூற்று</u>

திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது	2012		2011	
	ரூபா.	ரூபா.	ரூபா.	ரூபா.
<u>தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலான காசுப்பாய்வு</u>				
ஆண்டுக்கான மிகை (பற்றாக்குறை)		227,294,733		235,009,985
காசு அல்லாத அசைவுகளுக்கான சீராக்கல்கள்				
தேய்மானம்	26,165,069		10,387,406	
முந்திய ஆண்டுக்கான சீராக்கல்கள்	(3,280,602)		18,426,279	
நிலையான சொத்துக்கள் கையளவிலான இலாபம்	-		(103,900)	
பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	31,636,288	54,520,755	71,239,003	99,948,788
செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு பெறுபேறு		**281,815,488**		**334,958,773**
<u>செயற்பாட்டு மூலதனத்திலான மாற்றங்கள்</u>				
வருமதியானவை	(7,583,145)		(95,481,548)	
கையிருப்புகள்	(8,063,023)		(2,457,403)	
செய்திகளும், அட்டுறுக்களும்	522,835	(15,123,332)	46,551,580	(51,387,371)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பிறப்பிக்கப் பட்ட நிகர காசு		**266,692,156**		**283,571,402**
<u>முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்வு</u>				
நிலையான சொத்துக்களைக் கொள்ளல்	(107,211,266)		(27,639,912)	
நிலையான சொத்துக்களைக் கையாளல்	-		103,900	
முதலீடுகளிலான (அதிகரிப்பு) / வீழ்ச்சி	(196,038,702)		(75,736,438)	
நெடுங்கால வருமதிகளின் அதிகரிப்பு	(14,938,057		(11,685,179)	
முதலீட்டு நடவடிக்கைகளில் பாவித்த நிகரகாசு		**(318,188,025)**		**(114,957,629)**
<u>நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்த காசுப்பாய்வு</u>				
வெளிநாட்டு வள நிதியம்	21,422,365		-	
பணிக்கொடை செலுத்தல்கள்	(6,996,792)		(11,025,111)	
சிறப்பு நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள்	(1,832,790)		(47,241,003)	
வெளிநாட்டு நிதியிடப்பட்ட கருத்திட்டங்கள்	(18,454,919)		1,925,984	
நிதிசார் நடவடிக்கைகளில் பாவித்த காசு		**(5,862,137)**		**(56,340,130)**
காசும் காசுக்கு சமமானவற்றினதும் நிகர காசு அதிகரிப்பு		**(57,358,006)**		**112,273,643**
ஆண்டில் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்		124,277,902		12,004,259
ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும்		**66,919,896**		**124,277,902**

2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று

	திரண்ட நிதி	மூலதன ஒதுக்கங்கள்	மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்கள்	வெளிநாட்டு நிதியிடப்பட்ட நிதி	திரண்ட மிகை	மொத்தம்
2011/01/01 இல் மீதி	19,944,705	16,064,386	0	0	(210,128,811)	(174,119,720)
கூட்டுக : மீள் மதிப்பீட்டு மிகைநிலை			353,250,000			353,250,000
மூலதனவாக்க வெளிநாட்டு நிதி				402,446,592		402,446,592
ஆண்டுக்கான மிகை நிலை					235,009,985	235,009,985
முந்திய ஆண்டுக்கான சீராக்கங்கள்					18,426,279	18,426,279
	19,944,705	16,064,386	353,250,000	402,446,592	43,307,453	835,013,136
கழிக்க : தேய்மான ஏற்பாடுகள்				(58,328,529)		(58,328,529)
2011/12/31 இல் மீதி	**19,944,705**	**16,064,386**	**353,250,000**	**344,118,064**	**43,307,453**	**776,684,608**
கூட்டுக : மீள் மதிப்பீட்டு மிகைநிலை			103,535,000			103,535,000
மூலதனவாக்க வெளிநாட்டு நிதி				21,422,365		21,422,365
ஆண்டுக்கான மிகை நிலை					227,294,733	227,294,733
முந்திய ஆண்டுக்கான சீராக்கங்கள்						0
	19,944,705	16,064,386	456,785,000	365,540,429	270,602,186	1,128,936,707
கழிக்க : தேய்மான ஏற்பாடுகள்			(5,357,000)	(40,722,676)		(46,079,676)
முந்திய ஆண்டுக்கான சீராக்கல்கள்					(3, 280,602)	(3,280,602)
2012/12/31 இல் மீதி	**19,944,705**	**16,064,386**	**451,428,000**	**324,817,753**	**267,321,584**	**1,079,576,429**